முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1288

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.04.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக வள்ளலே அரங்கா வாழ்க
அன்னதான ஞானகுருவே தேசிகா வாழ்க
மாறுதலை உலகம் அடையவேண்டி
மாதவதர்மபலமாக அருளுகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 26 ம் நாள், 09.04.2023, ஞாயிற்றுக்கிழமை)
வையகம் சுத்த சன்மார்க்க நெறியை தர்மஞான கொள்கையாக ஏற்று
தரணியில் சரணாகதி நிகழ்ந்தால்தான்
3. நிகழ்ந்தால்தான் உலகத்தில் பெருமாற்றம்
நிலையான ஞான ஆட்சிக்காலமாக
வகைபட ஞானியர்கள் ஒன்றிணைய
வல்லமைபட உலகம் மாற்றங்காணும்
4. காணுகின்ற இந்த அற்புதத்தை
கட்டாயம் நடத்துவேன் என
ஞானதேசிகன் மாசேவையாற்றிவர
நம்பி மக்கள் அரங்கன்வழி தொடர்ந்தால்
5. தொடர்ந்திட உலகமெல்லாம் மாற்றம்
தேசிகன் அருளாலும் கருணையாலும்
ஆசிபட எந்தன் துணையாலும் ஆற்றல்பட மாற்றம் நிகழக்கூடும்
ஐயமற உலகோர் நம்பி வந்தால் அனைவருக்கும் பாதுகாப்பு உண்டுஉண்டு
6. அச்சமற அரங்கன் திருவடி பற்றி
மெச்சவே நாளும் நாமஜெபங்கள் மேலான தர்மங்கள் தொடர்ந்துசெய்தால்
செய்திட உலகுக்கு மாற்றமுண்டு
சித்திகள் யாவர்க்கும் உண்டுஉண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—